**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 132** **நாள்: 07.03.2026**

**மாண்புமிகு மேயர் அவர்களின் 2026-2027 நிதிநிலை அறிக்கை அறிவிப்பின்படி, கோடைக் காலங்களில் வெயிலின் தாக்கத்திலிருந்து தூய்மைப் பணியாளர்களைப் பாதுகாக்கும் வகையில் பெருநகர சென்னை மாநகராட்சியில் 29,461 பணியாளர்களுக்கு குளிர்ச்சியான மோர் வழங்கும் திட்டத்தை மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் இன்று தொடங்கி வைத்தார்.**

மாண்புமிகு மேயர் அவர்களின் நிதிநிலை அறிக்கை அறிவிப்பின்படி, கோடைக்காலங்களில் வெயிலின் தாக்கத்திலிருந்து பணியாளர்களைப் பாதுகாக்கும் வகையில் பெருநகர சென்னை மாநகராட்சியின் தூய்மைப் பணியாளர்கள் மற்றும் இதர களப் பணியாளர்களுக்கு குளிர்ச்சியான மோர் வழங்கும் திட்டத்தை மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் இன்று (07.03.2026) ரிப்பன் கட்டட வளாகத்தில் தொடங்கி வைத்தார்.

இதன் தொடக்கமாக, பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்கள், மயானபூமி பணியாளர்கள், பொது கழிவறை மற்றும் மலேரியா பணியாளர்கள் என 100 தூய்மைப் பணியாளர்களுக்கு குளிர்ச்சியான மோர் வழங்கப்பட்டது. இத்திட்டம் அனைத்து மண்டலங்களிலும் பணிபுரியும் 29,461 மாநகராட்சிப் பணியாளர்களுக்கு 09.03.2026 அன்று முதல் ஆவின் மோர் வழங்கப்படவுள்ளது.

மாண்புமிகு மேயர் அவர்களின் 2026–27ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை அறிவிப்பின்படி, கோடைக் காலங்களில் வெயிலின் தாக்கத்தை போக்கவும், நீர்ச்சத்தை பராமரிக்கவும், உடல் வெப்பத்தை தணிக்கவும், பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அனைத்து நிரந்தர, தற்காலிக மற்றும் வெளிமுகமை தூய்மைப் பணியாளர்களுக்கு குளிர்ச்சியான மோர் வழங்கும் புதிய திட்டம் தொடங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

அதனடிப்படையில், கோடைக் காலங்களான மார்ச் மாதம் 2026 முதல் ஜூன் மாதம் 2026 வரை ஆவின் நிறுவனத்திடம் இருந்து குளிர்ச்சியான 200 மீ. லிட்டர் மோர் ரூ.8 விலைக்கு கொள்முதல் செய்து, பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் பணிபுரியும் நிரந்தர, சுயஉதவிக் குழு, NMR மற்றும் தனியார் நிறுவனத்தினர் மூலம் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்கள், மலேரியா பணியாளர்கள், மயானபூமிகளில் பணிபுரியும் தூய்மைப்

பணியாளர்கள், பொதுக் கழிவறைகளில் தூய்மைப் பணிகளில் ஈடுபடும் தூய்மைப் பணியாளர்கள், மாநகராட்சியின் பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானப் பணியாளர்கள் மற்றும் களப் பணியில் ஈடுபடும் சாலைப் பணியாளர்கள் என மொத்தம் 29,461 பணியாளர்களுக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஆவின் நிறுவனத்திற்கு ரூ.8/-க்கு குளிர்ச்சியான 200 மில்லி லிட்டர் மோரை (பாக்கெட்டில்) மண்டலங்களில் அடையாளம் காட்டப்பட்ட 30 இடங்களில் விநியோகம் செய்ய ஆவின் நிறுவனத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு தோராயமாக ரூ.2.83 கோடி செலவாகும் என கணக்கிடப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் மூலம், பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் 29,461 தூய்மைப் பணியாளர்கள் மற்றும் களப் பணியாளர்கள் கடுமையான கோடை வெயிலின் தாக்கத்திலிருந்து பாதுகாப்பாகவும், அவர்களின் உடல் வெப்பத்தை தணிக்கவும், நீர்ச்சத்தை பராமரிக்கவும், இந்த குளிர்ச்சியான மோர் வழங்கும் திட்டம் உதவுகிறது.

இந்நிகழ்ச்சியில் மாநகராட்சி ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., நிலைக்குழுத் தலைவர் (பொது சுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி, கண்காணிப்பு பொறியாளர் (திடக்கழிவு மேலாண்மைத் துறை) திரு.பாலமுரளி மற்றும் அலுவலர்கள், தூய்மைப் பணியாளர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**